
# சுதந்திரன்
SUTANTIRAN

வ. ஆ. 2001, சித்திரை 20உ ஞாயிறு (3-5-70) ஸபர் பிறை 26—புத்தகம் 24 இதழ் 27


## 'தமிழரசார் ஆதரவின்றி எந்தச் சிங்கள ஆட்சியும் நிலைக்க முடியாது'—உதுமான்

(களுவாஞ்சிகுடி நிருபர்)

'இலங்கையில் உள்ள எந்த அரசியல் கட்சிகளாலும் தனியாக ஒரு அரசாங்கத்தை அமைக்க முடியாது. அவை தமிழரசுக் கட்சியின் உதவியுடன்தான் இலங்கை அரசாங்கத்தை அமைக்க முடி



யும். இதை எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்தான் உங்களால் பூரணமாக உணரமுடியும்'

இவ்வாறு துறை நீலாவணை மக்களால் மேற்படி கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த தமிழ் அரசுக் கட்சி காரியாலயத்தைச் சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டி திறந்து வைத்த கல்முனை-தமிழ் அரசுக் கட்சி வேட்பாளரான டாக்டர் ஜனூப் உதுமான் லெப்பை அவர்கள் குறிப்பிட்டார்

(4-ம் பக்கம் பார்க்க)



# இனவெறிச் சிங்களவரின் கைக்கூலியா இளஞ்செழியன்?

## அண்ணாவுக்கு இழுக்குத்தேடும் முயற்சியை அகற்றுவோம்!

### இ. தி. மு. க. பொதுச் செயலாளர் மணவைத்தம்பி அறிக்கை!

கொழும்பு, மே. 2

ஈழத்தமிழர்களின் இதயமெல்லாம் இலட்சிய தெய்வமாய் வீற்றிருக்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும் தமிழ்நாடு பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் அரசைக் கைப்பற்றி தலைநிமிர்ந்து நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், அண்ணாவின் பின் எங்கள் எண்ணமெல்லாம் இனிக்க தமிழ் மண்ணாளும் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும் களங்கம் கற்பிக்கும் வகையில் தி. மு. க. என்ற பெயரைப் பயன்படுத்தி இம்முறை பொதுத்தேர்தலில் இளஞ்செழியன் என்ற போக்கற்ற பேர்வழி ஒருவர் இறங்கி இருக்கிறார். இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகம் என்ற பெயரில் மட்டக்களப்புத் தொகுதியிலும் பருத்தித்துறைத் தொகுதியிலும் இந்தப் பேர்வழி இரு வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்தியிருக்கிறாராம். அரசாங்கத்தால் பதிவு செய்யப்படாதஇக்கட்சியின் வேட்பாளர்களுக்கு தோல்வியை ஏற்படுத்திக்கொடுப்பதன்மூலம் தொடர்ந்து ஈழத்தில் அண்ணாவின் பெயரையும் தி. மு. க.வின் பெயரையும் வைத்து வியாபாரம் செய்யும் சூதர்கள் நடமாட்டத்தைத் தடுக்க ஈழத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும்!!

இவ்வாறு இ. தி. மு. க. பொதுச்செயலாளர் ஏ.எஸ். மணவைத்தம்பி சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில்குறிப்பிட்டுள்ளார். இவ் வறிக்கையில் அவர் மேலும்கூறி இருப்பதாவது:-

மட்டக்களப்பு தேனாடு பதினைந்து வயதிலிருந்தே அறிஞர் அண்ணாவால் 'ராஜா' என்று செல்லமாக அழைக்கப்பட்ட எழில் தமிழ் ஆளர் இராசதுரை அவர்களை தி. மு. க. வீரனாக வளர்த்தெடுத்து தமிழரசுக் கட்சிக்கு அந்தத் தமிழ்ச் சிங்கத்தைத் தத்துக்கொடுத்த முத்தமிழ் நாடாகும். மீன்பாடும் அந்தத் தேனாட்டில் அண்ணாவை பேயைவிடப் பயங்கரமான ஆள் என்று மக்கள் கருதிய காலத்தில் தி. மு. க. கொள்கை பேசி, அண்ணாவின் திறன்பேசி கொள்கை வளர்த்தவர் இராசதுரை! இன்றும் கலைஞர் கருணாநிதியின் கருத்தில் நிறைந்த அருமை நண்பராய் கொள்கைத் தோழராய் விளங்கி

(4-ம் பக்கம் பார்க்க)

## 'என்றும் எங்கள் பிரதிநிதி இராசதுரையே'

மட்டுநகர், மே 2.

எங்கள் பகுதி மக்களுக்கு விவசாயப் பூமி, குடியிருப்பு பூமி, போககுவரத்திற்கு தெரு, வைத்திய வசதிக்கு ஆஸ்பத்திரி, பாடசாலைகள், நீர்ப்பாசன வசதிகள் அனைத்தும் செய்து—எங்கள் தாய்மொழியின் உரிமைக்குப் போராடிய திரு. செ. இராசதுரை அவர்களை இம்முறை பொதுத் தேர்தலில் நாம் ஆதரிப்போம் என்று இலுப்பையடிச் சேனையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தலைவர் ஏ. கோபாலபிள்ளை பேசினார்.

திரு. செ. இராசதுரை, பொ. கந்தசாமி மற்றும் பலர் கூட்டத்தில் சொற்பெருக்காற்றினர்.

# உலகத்தமிழினத்தின் கண்போன்றவர்கருணாநிதி!

## அவர் கண்நோயினால் கலங்கும்போது ஆறு கோடித் தமிழரின் கண்கள் கலங்குகின்றன!

கொழும்பு மே 2

இலங்கைத் தமிழ்ப் பகுதிகளிலெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் கண்நோய் குறித்து ஒவ்வொரு தமிழ் உள்ளமும் கவலை கொண்டு நிற்பதையே கடந்த ஒருவாரகாலமாகக் காணக் கூடியதாக இருக்கிறது.



ஈழத்தின் தலைநகரிலுள்ள தமிழ் இளைஞர்கள் பலர் கோயிலுக்குச் சென்று பக்தியோடு கலைஞர் கருணாநிதி அவர்கள் கணநோய் தீர்ந்து சுகம் பெற வேண்டும் என்று விசேட வழிபாடு செய்தனர்.

தமிழகத்தில் இருந்து ஈழத்துக்கு வரும் செய்தித்தாள்களை உடனுக்குடன் சென்று வாங்கி கலைஞர் அவர்களின் கண்நோய் பற்றிய செய்தியை அறிய இங்குள்ள தமிழ்மக்கள் துடித்து நிற்பதைக்காணக்கூடியதாக இருக்கிறது:

கண் நலம் பெற்று நீங்கள் பன்னெடுங்காலம் வாழ வேண்டும்!' என்று அனைத்திலங்கைக் கலாச்சார இயக்கமான தமிழ்த்தாய் மன்றம் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு தந்தி ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

''உலகத் தமிழினத்துக்கு ஒளியூட்டும் எழில் விளக்காக—வழிகாட்டும் படைத்தலைவனாக வாழும் நமது கலைஞரின் கண் அவர் நிழலில் சுகம் பெறும் தமிழ் மண் போலவே விரைவில் சுகம் பெறும் என ஆவலோடு எதிர்பார்ப்போம்!'' என்று எழில் தமிழ் ஆளர் இராசதுரை சுதந்திரன் நிருபரிடம் கூறினார்!

# அண்ணா கைவிட்டது பிரிவினையை! ஏற்றுக் கொண்டது சமஷ்டித்தத்துவத்தை!

-காங்கேசன்துறை மே.2

அண்ணா கைவிட்டது பிரிவினை அதன் பின் அவர் வற்புறுத்தியது மாநிலசுயாட்சி! அண்ணாவின் அரசியலின் அரிச்சுவடி அறியாக் காங்கிரசாரே! அன்னையர் குலத்திடம் செல்லாது உங்கள் செப்படிவித்தை!

இவ்வாறு காங்கேசன்துறையில் வீரப்பெண்ணின்

## இது புரியாமல் எதற்காக அலட்டுகிறீர்கள் காங்கிரசாருக்கு தமிழ்ப் பெண் சாட்டை!

அரசியல் விளக்கம் கேட்டு அதிர்ந்தார் ஆனைப்பந்திக் காங்கிரசின் ஆதர வாளர் ஒருவர்!

இணைப்பாட்சித் தத்துவத்தின் தன்மைதனைப் புரியாது அதனைப் பிரிவினை எனப்பிதற்றித்திரிகின்றபிற்போக்குக் காங்கிரசார் ''அண்ணாவை''த் துணைக்கழைத்து அண்ணா பிரிவினையைக் கைவிட்டது போல் தமிழரசாரும் சமஷ்டியைக் கைவிடவேண்டும்'' என அண்மைக் காலத்தில் கூச்சல் போடுகின்றனர்.

அண்மையில் ஒரு காங்கிரஸ் ஆதரவாளர் தமிழரசு ஆதரவுடைய ஒரு வீட்டுக்குச் சென்று இதே கருத்தைக் கூறினாராம் உடனே அங்கிருந்த செந்தமிழ்ச் செல்வி யொருத்தி அவரது தவறான கூற்றுக்கு அண்ணாவின் உரையிலிருந்தே தகுந்த ஆதாரம் காட்டி அவரது அர்த்தமற்ற வாதத்தைத் தவிடு பொடியாக்கினாள். இந்த வீரமிகு மங்கை காங்

(2-ம் பக்கம் பார்க்க)

## வேட்பாளனும் வாக்காளனும்

காரைநகரில்
(வட்டுக்கோட்டை)

வேட்பாளர்: நான் ஊரவன், எனக்கு நீங்கள் கட்டாயம் உதவி செய்ய வேண்டும்.

வாக்காளன்: கட்டாயம் உதவி செய்யத்தான் வேண்டும். இப்ப கையிலை ஒன்றுமில்லை தேர்தல் முடிஞ்சு வாருங்கள், பாப்போம்.

## துரோகம் பேசுகிறது!

இலங்கையில் ஒரு தனிச்சிங்கள மந்திரி சபையை அமைப்பதற்கு எனது கணித மூளையை உபயோகித்து காலஞ்சென்ற டி. எஸ். சேனநாயக்காவிற்கு வழிவகுத்துக் கொடுத்தது நானேயென்பது வரலாற்று உண்மையாகிவிட்டது.

—சி. சுந்தரலிங்கம்,

—(68 பெப்ருவரி 4 -டெயிலி மிரர்)

## பளையிலும் காங்கிரசார் காடைத்தனம்!

கிளிநொச்சி, மே 2

கடந்த 21-4-70ல் பளைப் பகுதியைச் சேர்ந்த கிளாலியில் தமிழரசுக் கட்சியின் கூட்டம் நடைபெற்றது 15 மைல் நீளமான சயிக்கில் ஊர்வலமும் நடைபெற்றது. ஊர்வலத்தைக் கண்டு மனம் பொறுக்கமுடியவில்லை காங்கிரஸ் நண்பர்களுக்கு.

சங்கக் கடை மனேச்சர் ஒருவர் ஆரம்பத்தில் காரில் ஆலாலசுந்தரத்துடன் சென்ற ஒருவரை மறித்து அடித்துள்ளார். அவ்வீதி வழியே சயிக்கில் ஊர்வலம் வந்தபோது குறித்த நபர் அவ்வூர்வலத்தை மறித்தார். ஊர்வலத்தின் தொங்கலிலே வந்த பொலிசார் அவரை பொலிஸ் நிலையத்துக்குக்கொண்டு சென்றனர்.

அவர் சுயநினைவில்லாதிருப்பதாலும் பிறரின்—தூண்டுதலாலும் இப்படி நடக்கின்றார் என்பதைப் பொலிசாருக்கு எடுத்துச் சொல்லிய தமிழரசு வேட்பாளர் மு. ஆலாலசுந்தரம் சுயநினைவுக்கு வந்ததும் அவரை வெளியே விடுமாறு கூறினார்.

இத்தோடு தமிழரசு வேட்பாளரை அடிப்பதற்காக கையில் பொல்லுடன் நின்ற ஆசிரியர் ஒருவர் இடத்தை விட்டுத் திடீரென மறைந்து விட்டார். இப்படியே பளைப் பகுதியில் பரவுகின்றது காங்கிரஸ் வெறி ஆட்சி.

# எண்ணம்

தமிழ் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை (5)

## சமஷ்டி ஆட்சி ஏற்படின் தமிழினம் ஒதுக்கப்படுமா?

"சமஷ்டி அரசியலமைப்பானது சரிவர செயல்படும்போது தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குள் ஒதுக்கப்படுவதும், நாட்டின் ஏனைய பகுதிகளில் அவர்களின் சகல உரிமைகளையும் இழந்துவிடுவதும தவிர்க்கமுடியாதவையாகும். அல்லாமலும் சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழ் இருமாகாணங்களில் நிர்வாக மொழியாகவும் அதே தருணத்தில் மொத்தம் ஒன்பது மாகாணங்களிலும் சிங்களமே அரசகரும மொழியாகவும் விளங்கும், ஆகவே சமஷ்டி அரசியற் கோரிக்கையானது சமஅந்தஸ்து கோரும் தமிழ் மக்களின் கோரிக்கையிலிருந்துபின்வாங்குவதாகும். சமஷ்டி அமைப்பின்கீழ் நிர்வாக சேவையிலும் தனியார் துறையில் கல்விபயின்ற தமிழருக்குமுரிய தொழில்களிலும் உரிய தொழில் வாய்ப்புக்கள் இவ்விரு மாகாணங்களுடன் மட்டும் கட்டுப்பட்டுவிடும், தமிழ்ப்பிரிவு நிதி வசதி குன்றியதாகையால் தமிழ் பிரதேசங்கள் அபிவிருத்தியுற முடியாமல் பொருளாதார சர்வநாசம் தவிர்க்க முடியாததாகிவிடும்..........."

—இப்படிவெல்லாம் சமஷ்டி ஆட்சியமைப்பு பற்றி கூறிச்செல்லுகிறது தமிழ் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை.

இராணி அப்புக்காத்து, ஐ. நா. புகழ் தங்கமாலை வீரர் என்றெல்லாம் தமது சீடகோடிகளால் புகழப்படும் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அரசியலறிவு—சமஷ்டி அரசமைப்பு பற்றிய விளக்கம்—எவ்வளவு பூஜ்யமாக இருக்கிறதென்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

ஐந்து கண்ணன் வருவான் என்று அறியாச் சிறுவர்களுக்கு அன்னையர் பூச்சாண்டி காட்டுவது போல, தமிழ்பேசும் மக்களுக்கு சமஷ்டி அரசியல் என்றால் என்னவென்று தெரியாதென்ற நினைப்பில் பூச்சாண்டி காட்டியிருக்கிறார் திரு. பொன்னம்பலம்.

சமஷ்டி ஆட்சியமைப்பு ஏதோ உலகில் இதுவரை இயங்காததொன்றா? இலங்கைக்குமட்டும் புதுமையானதா? தமிழரசுக் கட்சியின் கண்டுபிடிப்பா?

தமக்கென ஒரு மொழியையும் தமக்கென ஒரு பிரதேசத்தையும் சொந்தமாகக்கொண்ட ஒன்றுக்குமேற்பட்ட இனங்கள் வாழும் பல்வேறு நாடுகளிலும் சகல இனங்களுக்கிடையேயும் சம அந்தஸ்தும், சம வாய்ப்பும், சந்துஷ்டியும் தந்து வரும் அருமருந்தன்ன ஆட்சியமைப்பே சமஷ்டியாட்சியமைப்பாகும்,

சமஷ்டி ஆட்சியின்கீழ் ஒரு இனம் உயர்ந்ததாகவும், மற்றோர் இனம் தாழ்ந்ததாகவும் கருதப்படுவதற்கு துளிவும் இடமில்லை. எல்லா இனங்களுமே ஆளும் உரிமைபெற்ற இனங்களாக—தமக்குள்—சம உரிமை படைத்த இனங்களாக வாழ்வதற்கு அரசியலறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டு உலக நாடுகளால் வெற்றிகரமாகப் பின்பற்றி வரப்படும் ஒரு தத்துவமே சமஷ்டி!

சமஷ்டி ஆட்சியின் கீழ் தமிழ் பேசும் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குள் ஒதுக்கப்பட்டுவிடுவர்; தொழில், உத்தியோகவாய்ப்புக்கள் இவ்விரு மாகாணங்களுக்குள்ளும் கட்டுப்படுத்தப்பட்டுவிடும்; என்றெல்லாம் கூறப்படுவது ஒன்றில் கடைந்தெடுத்த அறிவீனமாக இருக்க வேண்டும்; அல்லது விஷமத்தனமாக இருக்க வேண்டும்.

அமெரிக்கா, ரஷ்யா, கனடா, இந்தியா, செக்கோஸ்லவேக்கியா, யூகோஸ்லவேக்கியா போன்ற பெரிய நாடுகளிலும்சரி, இலங்கையைவிடச் சின்னஞ்சிறு நாடான சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளிலும் சரி இனப்பிரச்சினையைத் தீர்க்கும் மாமருந்தாக சமஷ்டி அரசியல் திட்டமே பின்பற்றப்பட்டு வருகின்றது.

அந்த நாடுகளில், ஒரு இராச்சியத்தைச் சேர்ந்த மக்கள் அதே இராச்சியத்துக்குள்ளேயே அடங்கிக் கிடக்கவில்லை! அடக்கப்பட்டிருக்கவுமில்லை! அவர்கள் வெவ்வேறு இராச்சியங்களிலும் சென்று தொழில் செய்கிறார்கள்; உத்தியோகம் பார்க்கிறார்கள்; தங்கள் மொழிக்கு, தங்கள் இனத்துக்கு, தனியரசு என்று இருக்கிறது என்ற உள்ள நிறைவுடன்!

நமது அண்டை நாடான இந்தியாவைப் பாருங்கள்! அங்கு நடைபெறுவது 17 தனித்தனி மாநிலங்கள் இணைந்த சமஷ்டி ஆட்சி. தமிழ் மக்களுக்கு எப்படி தனிமாநிலம்—தனியரசு உண்டோ—அதேபோல ஏனைய மொழி பேசும் மக்களுக்கும் தனித்தனி அரசுகள் அங்கு உண்டு.

ஆனால் அதற்காக தமிழ் நாட்டான், தமிழ் நாட்டுக்குள் மட்டுமா அடைபட்டுக்கிடக்கிறான்? பம்பாயில், மகாராஷ்டிரத்தில், டில்லியில், கேரளத்தில், ஆந்திராவில் எல்லாம் அவன் தொழில் செய்யவில்லையா? உத்தியோகம் பார்க்கவில்லையா?

அதேபோல ஏனைய மாநிலமக்கள் எல்லோரும் தத்தம் மாநிலங்களுக்குள் மட்டுமா அடைந்து கிடக்கிறார்கள்? தத்தம் மாநிலங்களைவிட்டு வெளியேறி ஏனைய மாநிலங்களில் தொழில் நடத்தவில்லையா? பம்பாயைச் சேர்ந்தவன், குஜராத்தை சேர்ந்தவன், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவன் தமிழ் நாட்டில் தலைநிமிர்ந்து வாழவில்லையா?

எல்லோரும் எங்கும் செல்கிறார்கள்—அச்சமின்றி தொழில் நடத்துகிறார்கள்—சம உரிமையுடன் தலை நிமிர்ந்து வாழுகிறார்கள் என்றால் அதற்கு வழிவகுத்து கொடுத்திருப்பது சமஷ்டி ஆட்சியமைப்பாகும். ஒவ்வொரு மொழியினரும் தமக்கென தனியொரு பிரதேசம்—தனியரசு இருப்பதால் தலைநிமிர்ந்து சம உரிமையுடன் அங்கு வாழுகிறார்கள். சமஷ்டி ஆட்சியின் கீழ் எல்லோரும் சம உரிமைபடைத்த மக்களாக இருப்பதால் தகராறுகள், இனவிரோதங்கள் எழுவதற்கு துளியும் இடமில்லை—

இதே போல—இலங்கையிலும் சமஷ்டி ஏற்படின், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குள் மட்டும் தமிழ் மக்கள் முடங்க வேண்டுமென்பது விழல் தனமான—விஷயம் விளங்காத குளறுபடியாகும்.

சமஷ்டி ஏற்பட்டாலும்—இன்று போலவே தமிழ் பேசும் மக்கள் தென்னிலங்கையில் தொழில் நடத்தலாம்—சிங்களவர்களும் தமிழ் பிரதேசங்களில் இப்போதுபோல தொழில் செய்யலாம்—ஆனால் ஒரேயொரு வித்தியாசம்: இன்று தென்னிலங்கையில் தமிழ் மக்கள் பயந்து பயந்து வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆனால் சமஷ்டி ஆட்சியின் கீழ் தமிழரசு நிறுவப்பட்ட பின்னர் எமக்கும் இந்நாட்டில் ஓர்சுய ஆட்சியிருக்கிறது என்ற துணிச்சலுடன் நெஞ்சை நிமிர்த்தி சிங்களவர்களுடன் சம உரிமைபடைத்தவர்களாக அவர்கள் வாழ முடியும்.

சமஷ்டி ஆட்சியின் கீழ் தான் தமிழினத்தின் தனித்துவம் பாதுகாக்கப்படும்; தமிழ்ப் பிரதேசம் பாதுகாக்கப்படும்; தமிழ் பேசும் மக்களும், சிங்களம் பேசும் மக்களும் மட்டுமன்றி தமிழ் பிரதேசமும் சிங்களப் பிரதேசமும் கூட தமக்குள் சம அந்தஸ்து அடைமுடியும்—

சிங்களப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் தொழில் நடத்த விடாது தடுக்கப்படுவார்களானால்—தமிழ் பிரதேசத்தில் சிங்களவர்களும் தொழில் நடத்த விடாது தடுக்கப்படுவார்கள் என்ற அச்சம் எப்பொழுதும் சிங்களவர்களுக்கு இருந்து கொண்டிருக்கும். இது சமஷ்டி ஆட்சியின் கீழ் உள்ள நிலை; ஆனால் ஒற்றையாட்சியில் சிங்களவர்கள் தமிழ் மக்களை எவ்வளவு தூரம் ஏறி மிதித்தாலும் தட்டிக்கேட்க யாருக்கும் அதிகாரம் கிடையாது. தமிழ்மக்கள் மீளா அடிமைகளாக அழிந்தொழிந்து போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

சமஷ்டியின்கீழ் மொழி சமத்துவம் பற்றி பின்னர் ஆராய்வோம்—

## யூ. என். பி. யும் சுதந்திரக் கட்சியும் தமிழினத்தின் இரட்டை எதிரிகள்!

### கல்முனைக் குடியில் உதுமான் முழக்கம்!

கல்முனைக்குடி, மே 2

'நேரடியாக தமிழ் பேசும் மக்களின் கண்களில் குத்த முனையும் சிறி லங்கா சுதந்திரக்கட்சி எனது முதலாவது விரோதி. பின் புறத்தால் தமிழ்பேசும் மக்களை ஆழமான குழிதோண்டி நீளப் புதைக்க முயலும் ஐக்கிய தேசியக் கட்சி எனது இரண்டாவது விரோதி. இந்த இரண்டு விரோதிகளையும் எதிர்வரும் மே 27ந் திகதி கல்முனைத் தொகுதியிலிருந்து ஓட ஓட விரட்டியடிப்பேன் என்பதை இப்போதே உங்களுக்குகூறிவைக்க விரும்புகிறேன்.

—இவ்வாறு கல்முனைக்குடி முதலாம் குறிச்சியில் நடைபெற்ற தமிழரசுத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் முழங்கினார் ஜனாப் உதுமான் லெப்பை.

கல்முனைக்குடியின் வரலாறு காணாத அளவுக்கு மக்கள் வெள்ளம் திரண்ட இக் கூட்டத்தில் உதுமான் பகிரங்க சவால் ஒன்றையும் தம்முடன் போட்டியிடும் மற்ற இரு அபேட்சகர்களையும் நோக்கி விடுத்தார்.

கல்முனைத் தொகுதியில் போட்டியிடும் சிறிலங்கா சுதந்திரகட்சிவேட்பாளரும் ஐக்கிய தேசியக்கட்சிக் வேட்பாளரும் என்னோடு அரசியல்பேச பொதுமேடை ஒன்றுக்கு வருவார்களா? என்று சவால் விட்ட ஜனாப் உதுமான், விரும்பினால் அவர்களே பொதுமேடை அமைக்கட்டும்; அவர்கள் அமைக்கும் இடத்துக்கு நான் சென்று பேசத் தயாராக இருக்கிறேன்' என்றும் பலத்த கைத்தட்டலுக்கிடையே முழக்கமிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்:

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளரும், ஐ. தே. க. வேட்பாளரும் என்னுடன், அரசியல் பேச பொதுமேடை ஒன்றுக்கு வருவார்களானல் அன்றே அவர்களுக்கு தோல்வியேற்படும், அதன் பிறகு மே 27ல் அவர்கள் நிச்சயம் படுதோல்வியடைவார்கள்.

நான் கல்முனைத் தொகுதியில் வெற்றி பெறுவது உறுதி. ஜூன் 7ல் கல்முனைத்தொகுதி தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதியாக பாராளுமன்றத்தில் இருக்கப்போவது நிச்சயம் என்பதை உங்கள் ஒளிமிகுந்த கண்கள் எனக்கு கூறாமல் கூறுகின்றன' என்றார்.

## கோணேசர்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சியல் சார்பற்ற விசாரணைச் சபையை 1968 ஆவணியில் உண்டாக்கியவரும் ஒரு தமிழ் மந்திரியாக அப்பொழுது கடமையாற்றிய செனட்டர் மு. திருச்செல்வமாயிருக்கையில் தமிழ்த்தலைவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்று தலைவராகிய டாக்டர் சித்திரவேல் அவர்கள் சபையின் சார்பில் சபையின் சம்மதம் பெறாமல் அறிக்கைவிடுத்ததை நான் ஆதரிக்கவே முடியாது.

1954 தொடக்கம் 1970 மார்ச் மாதம் வரை அதிகாரத்தில் இருந்த இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளில் ஒன்றே அரசாங்கத்தை அமைக்கும் சூழ்நிலை இப்பொழுதும் உள்ளது. இவைகள் இரண்டும் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி விடயத்தை தட்டிக் கழித்து வந்துள்ளன. ஆகவே முழுவிடயத்தையும் எனக்குத் தெரிந்தமட்டில் இந்துப் பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். இவ்விடயத்தில் அவர்கள் ஒவ்வொருவரும் கண் விழிப்பாயிருப்பார்களென்பதில் எனக்கு ஒருவித ஐயமுமில்லை.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் திருக்கோணமலை உறுப்பினராக இருந்த திரு. சு. ம. மாணிக்கராசா அவர்கள் கோணேசர் ஆலய விடயத்தில் எடுத்த அக்கறை மிகவும் பெருமைக்குரியது என்பதைத்தலைவரும் மறுக்க மாட்டார். இருவம் ஒரு தமிழ்த் தலைவர்தான் என்பதை மேலும் கூறிவைக்க விரும்புகிறேன்.

அமரர் ந. இராசவரோதயம் கோணேசர் ஆலய விடயத்தில் செய்த தொண்டோ அளப்பரியது. இவரும் உலகில் வாழ்ந்த காலத்தில் ஒரு மதிப்பு மிகுந்த தமிழ்த் தலைவராகவே திகழ்ந்தார்.

ஆகவே கோணேசர் ஆலய விடயத்தில் தமிழ்த் தலைவர்களே முழுக்க முழுக்க முன்னின்று உழைத்தனர் உழைத்துக்கொண்டும் இருக்கிறார்கள்.

—

## அன்று அண்ணா..

(1-ம் பக்க தொடர்ச்சி)

கேசந்துறைப் பட்டினசபையின் 1ம் வட்டாரத்தில் வசிக்கின்றார்.

பிரிவினையைக் கைவிட்ட அறிஞர் அண்ணா மாநில சுயாட்சியையே பெரிதும் வற்புறுத்தினார் என்பதனைத் தான் அச்சமயத்தில் படித்துக் கொண்டிருந்த "ராணிமுத்து" வெளியீடான இலட்சுமி எழுதிய "பெண்மனம்" எனும் நூலின் 194-197 பக்கத்திலிருந்த அண்ணாவின் பேச்சை அந்தக்காங்கிரஸ் வாதிக்கு வாசித்துக் காட்டினார்.

இதனை ஆதாரம் காட்டியே காங்கேசன்துறையின் வீரப்பெண்மணி காங்கிரஸ் வாதியின் கருத்தற்ற வாதத்தைச்சாடினார் "அண்ணாவின் இந்தப்பேச்சு அதிக அதிகாரங்களையுடைய மாநில சுயாட்சியை அதாவது இணைப்பாட்சியைத் தானே வற்புறுத்துகிறது பிரிவினையைக் கைவிட்ட அண்ணா சமஷ்டியைத் தான் வலியுறுத்தினார். இதனைப்புரிந்து கொள்ளாது நீங்களும் உங்கள் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் அண்ணாவைத் துணைக்கழைத்து தமிழ்ப்பேசுமினத்தை ஏமாற்ற முயலாதீர்கள் குறிப்பாக எமது அன்னையர் குலத்திடம் உங்கள் ஏமாற்றுச் செல்லாது" என்ற அந்தப்பெண்ணின் வாதத்தைக்கேட்டு, அரசியல் அறிவுத்திறனை எண்ணி வியந்தவாறே உதிர்த்துவிட்டு அவ்விடத்தை விட்டகன்றார் அந்தக் காங்கிரஸ்வாதி.

# கோணேசர் ஆலயப் புனித நகர்ப் பிரச்சினை முழுக்க முழுக்க அரசியல் பிரச்சினையே!

திருக்கோணேஸ்வர ஆலய புனித நகரவிடயம் உச்சிக்கட்டத்தில் இருந்த நேரத்தில் திரு. ஆர். ஜி. சேனநாயகா அவர்கள் இக் கோணேஸ்வர விடயத்தை முன் வைத்து தான் திருக்கோணமலையில் பாராளுமன்றத்திற்குப் போட்டி இடப் போவதாக விட்ட அறிக்கைக்குக் கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபைத் தலைவராகிய டாக்டர். க.சு. சித்திரவேல் அவர்கள், அப்படி திரு. ஆர். ஜி. சேனநாயகா போட்டியிடும் பட்சத்தில் தானும் கோணேஸ்வர விடயத்தை முன் வைத்துப் போட்டி இடப் போவதாக அறிக்கை விட்ட பொழுது இந்த விடயத்தை அரசியலில் இழுத்து விடவில்லையா? கோணேஸ்வரர் ஆலய விடயங்கள் எப்பொழுது அரசியலுக்கு அப்பாற்பட்ட விடயமாக வந்துள்ளதோ தெரியவில்லை.

ஆலய விடயமாக தலைவர் அவர்கள் அரசாங்க அலுவலகங்களுக்கு எழுதும் கடிதங்கள் பலவற்றில் ''நான் ஐ.தே. கட்சி திருகோணமலை கிளையின் உப—போசகர்'' என்று இடித்துக் காட்டியதால் அரசியல் நிலையை மற்றவர்கட்கு அப்பட்டமாகக் காட்டுவதாக இல்லையா? இவை இந்துப் பெருமக்களுக்கு அனேகமாகத் தெரிந்திருக்க முடியாது. ஏனெனில் கடிதங்களில் அல்லவா இவை குறிப்பிடப் பட்டுள்ளது. ஆலய பரிபாலன சபைத் தீர்மானத்திற்கமைய நடந்திருப்பதாயிருந்தால் மேற்படி அறிக்கையைத் தலைவர் சபையின் அங்கீகாரமின்றி விடுத்திருக்க முடியாது. ஆகவே இந்துப் பெருமக்களின் மனதில் கிலேசத்தை உண்டுபண்ணக்கூடிய இந்த அறிக்கையில் எவ்வளவு முரண் பாடுள்ள கருத்துக்கள் பொதிந்துள்ளது என்பதைக் கூறி வைக்கவே நான் இதை விடுத்துள்ளேன்.

கோணேஸ்வரர் ஆலயபரிபாலனசபை 9-8-63.ல் ஆரம்பிக்கப்பட்டு 15-9-63ல் நிருவாகசபைதனது பொறுப்பை ஏற்றது. பரிபாலனசபை விதிகட்கமைய 3 வருடத்தின் பின் அதாவது 1966ம் ஆண்டில் அடுத்த பொதுக்கூட்டத்தை நடாத்தி புதிய நிருவாகத்தைத் தெரிவு செய்ய ஒழுங்குகளைக் கையாளும் பொறுப்பு தலைவருடையது. 1970 ஆகியும் கூட்டம் நடைபெறவில்லையே.

கோணேஸ்வரர் ஆலய புனித நகர விடயம் 1954ம் ஆண்டிலேயே அதாவது பரிபாலனசபை தோன்றுவதற்குப் பல ஆண்டுகட்கு முன்பே தொடங்கப்பட்ட ஒரு விடயம். 1964 நவம்பர் மாதம் 7ந் திகதி திருகோணமலைக் கச்சேரியில் அன்றிருந்த தலத்தாபன, உள்நாட்டு மந்திரியாகிய திரு. ஏ.பி. ஜெயசூரியா அவர்களின் தலைமையின் கீழ் புனித நகர் விடயமாக ஓர் மகாநாடு நடந்தது. மகாநாட்டின் முடிவில், அப்போதயப் பிரதமருக்குத் தமது சிபார்சைத் தெரிவிப்பதாக அவர் அறிவித்திருந்தார். 1965ம் ஆண்டு மார்ச் மாதம் தேசிய அரசாங்கம் பதவி ஏற்றது. இந்த அரசாங்கத்தின் பல மந்திரிமார்கள் திருக்கோணமலைக்கு விஜயம் செய்தபொழுதெல்லாம் கோணேஸ்வரர் ஆலயத்தில் அவர்கட்குப் பலவிதமான வரவேற்புகளும் நடந்தன.

1968ம் ஆண்டு சுதந்திர தினம் திருகோணமலையில் கொண்டாடப்படுமுன் திருக்

## திருச்செல்வம் இத்துறையில் எடுத்த பணி மகத்தானது!

கோணேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற இருந்த விசேட பூசை பற்றி சர்ச்சை கிளம்பியது. அது என்னவெனில் புனித நகர் விடயத்திற்கு எவ்வித முடிவும் இல்லா திருக்கையில் கோணேஸ்வரர் ஆலயத்தில் எவ்விதம் விசேட பூசை நடத்த முடியமென்பது தான் சர்ச்சைக்குரிய விடயம். இது இப்படி இருக்கையில் தலத்தாபன உதவி மந்திரியாக அப்பொழுதிருந்த திரு. ஆர். பிரேமதாசா அவர்கள் 15-1-68 ல் கோணேஸ்வரர் ஆலய விடயத்தைப் பரிசீலனை செய்ய விசேடமாக வருகை தந்தார். கோணேஸ்வரர் ஆலயத்தில் வரவேற்பும் நடந்தது. உடைந்து தரைமட்டமாகிய நிலையிலிருந்த மடமும் காட்டப்பட்டது. அதன் பின்

குறிப்பிடத்தக்கது) ஒரு குழுவை ஒழிப்பு மறைப்பின்றி அரசாங்க வர்த்தமானி மூலம் பிரகடனப் படுத்தி திருகோணமலை பிரட்டறிக் கோட்டைக்குள் கோணேஸ்வரத்திற்கு புனித நகர எல்லையாக வேண்டிய பகுதியை தீர்மானிக்கும் பொறுப்பைக் கொடுத்திருந்தார்.

அவ்விசாரணைக்குழு தனது காரியதரிசி மூலம் விண்ணப்பங்கள் கோரியதும் நேர்முக விசாரணையை 1968 புரட்டாதியில் நடத்தும் என்றும் திகதி பின்னால் அறிவிக்கப் படும் என்றும் அவ்வர்த்தமானியில் குறிப்பிட்டிருந்தது யாவரும் அறிந்ததே. ஆனால் இந்த அரசியல் சார்பற்ற இளைப்பாறிய நீதியர

> 'திருக்கோணேஸ்வர புனித நகர்ப் பிரச்சினையை அரசியலில் இழுக்க வேண்டாம்' என்றும், 'ஆரம்பத்தில் நாம் இந்தப் புனித நகர்த்திட்டத்தைக் கொண்டு வந்த போது தமிழ்த் தலைவர்கள் ஒத்துழைக்கவில்லை' என்றும் முறையே 6-4-70, 8-4-70 வீரகேசரிப் பத்திரிகைகளில் கோணேசராலய தர்மகர்தா சபைத் தலைவர் டாக்டர் க. சு. சித்திரவேல் அவர்கள் விடுத்த அறிக்கைகளுக்கு பதிலிறுக்கும் வண்ணம், மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையின் நிர்வாக உறுப்பினர்களில் ஒருவரும், திருகோணேமலை நகரத்தின் சமய சம்பந்தமான மற்றும் பொதுப்பணிகளில் முன்னின்று உழைக்கும் பிரபலஸ்தரும், சமாதான நீதவானுமான திரு. வீ. பூபாலபிள்ளை அவர்கள் கீழ்க்கண்ட அறிக்கையை விடுக்கின்றார்.
>
> கோணேஸ்வர ஆலய புனித நகர்ப்பிரச்சினை எப்பொழுது தோன்றிற்று? இப்பிரச்சினை சம்பந்தமாக நடைபெற்ற விசாரணைகளின் விபரங்கள் எவை? இந்துப் பொது மக்களுக்குத் தெரியாத வண்ணம் இவ்வாலயம் சம்பந்தப்பட்ட வகையில் திரைமறைவில் நடைபெற்ற சம்பவங்கள் யாவை? தழ்மித் தலைவர்கள் இவ்விடயத்தில் எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்னென்ன? என்பவைகளைப்பற்றி இவ்வறிக்கையில் ஆதியோடந்தமாக எடுத்துத் தெளிவாக்குகின்றார் திரு. வீ. பூபாலபிள்ளை. இவ்வறிக்கையை படித்த பின்னர், கோணேசராலயம் பற்றி ஒரு சிலர் விடுக்கும் அறிக்கையையிட்டு இந்துப் பொது மக்கள் கொண்டிருக்கும், ஐயப்பாடு - கிலேசம் நீங்குமென்பது தெளிவு.
>
> —ஆர்,

கச்சேரியில் ஓர் மகாநாடும் நடைபெற இருந்தது, ஆனால் அவர் அதை வேண்டாமெனக் கூறிச் சென்றார்.

31-1-68 ஆலய பரிபாலன சபையின் ஓர் விஷேச கூட்டம் சுதந்திர தின பூசை விடயமாக நடைபெற்றது. அப்பொழுது டாக்டர் க. சு. சித்திரவேல் அவர்கட்கு திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் எழுதிய கடிதம் சபையில் வாசிக்கப்பட்டது. அது தனி நபருக்கு வந்த தொன்றாகையால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இருந்தும், நம்பிக்கையின்மேல் பூசையை நடத்துவோம் என்று சபை தீர்மானித்தது. ஆகவே புனித நகர் விடயம் எந்தக்கட்டத்தை அடைந்துள்ளதென்பதை பிரதமரும் அறிந்திருந்தார் என்பது புலனாகின்றது.

இதைத்தொடர்ந்து அப்பொழுது தேசிய அரசாங்க மந்திரிசபையில் அங்கம் வகித்த ஒரேயொரு தமிழ் மந்திரியாகிய செனட்டர் மு. திருச்செல்வம் அவர்கள் நீதியின் நெறிநின்று ஒழுகியவரும், சைவ சிகாமணியுமாகிய காலஞ்சென்ற பொ. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் தலைமையில் மற்றும் இரெண்டு இளைப்பாறிய நீதிபதிகளை அங்கத்தவராகக் கொண்ட (இதில் ஒருவர் சிங்கள சகோதரர் என்பது

சர், நீதிபதிகள் ஆகியோரைக் கொண்ட குழு திடுதிப்பென்று கலைக்க வேண்டிய காரணம் அரசியல் இல்லாமல் வேறு என்னவாய் இருக்கமுடியும்?

தமிழ் மந்திரியாகிய செனட்டர் திருச்செல்வம், அரசியல் வாதிகள் தங்களுடைய செல்வாக்கை எந்த வகையிலும் பிரயோகிக்க முடியாத ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். ஆனால் பிரதம மந்திரி அவர்களோ அதைக் கலைத்துவிட்டு ஆறு

அருள்மலை விடயத்தைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டால் இங்கு 'இராணுவம் அமர்த்தப்பட்டதும் பூசை புனக்காரம் தடைப்பட்டது. இப்பொழுது இராணுவம் அகற்றப்பட்டு பொலிஸ் பொறுப்பில் அவ்விடம் உள்ளது. கும்பிட விரும்புவோர் அங்கு போகலாம் வரலாம். ஆனால் நிபந்தனையின்மேல் அங்குள்ள லிங்கத்தைத் தொடவோ அல்லது அபிஷேகம் ஆகியவை செய்வவோ முடியாது. இதுதான் அங்கு எமக்குக் கிடைத்துள்ள உரிமை. வணங்கிவந்த லிங்கத்திற்கு அபிஷேக ஆராதனை செய்யாமல் நிபந்தனையின்மேல் வணங்கிவரவேண்டும். இந்த உத்தரவு யாரால் விடுக்கபபட்டது?

மடம்

கோணேசர் ஆலய பரிபாலன சபையின்கீழ் ஒரு மடம் பக்தர்கள் வந்து தங்கிச் செல்லவும், அன்னதானம் ஆகிய தர்ம கைங்கரியங்கள் நடைபெறவும் உதவி வந்தன. இம்மடம் 1964 மார்கழி மாதம் 22ந் திகதி நடந்த கோரப் புயலினால் தரைமட்ட மாக்கப்பட்டது. அன்று தொட்டு இன்றுவரையும் அதைக்கட்ட மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதே. எதனால்? இராவணன் வெட்டிற்கு இந்தப்பக்கத்தில் எந்தவிதமான வேலையும் நடைபெறக்கூடாது என்பதாலே. இயற்கையினால் உண்டாகிய புயலினால் உடைக்கப்பட்ட மடத்தையே கட்ட மறுப்பு யார் தெரிவிக்கிறார்? மடம் ஒன்று தர்ம கைங்கரியங்கட்கு வேண்டியது என்று அரசினருக்குப் பலமுறை எடுத்துரைத்தும் காரியம் கைகூடவில்லையே. கோயிலுக்கு வந்து செல்பவர்கள் படும் கஸ்டத்தை நான் எடுத்துக் கூறாமலே இந்துப் பெருமக்களுக்கும், அங்கு வந்து செல்பவர்கட்கும் நன்கு புரியும்.

8-4-1970ல் வெளியான வீரகேசரியில் ''கோணஸ்வரம் புனித நகராகும்'' பரிபாலன சபையினர் வகுத்துள்ள திட்டம் என்ற மகுடத்தின் கீழ் திருகோணமலை நிருபர் கொடுத்துள்ள விடயத்தையும் படித்தேன். ஆக்கபூர்வமான திட்டங்களை திருக்கோணேஸ்வரர் பரிபாலன சபை தீட்டியுள்ளதென்றும் கூறப்பட்டிருக்கின்றது. பரிபாலன சபை நிருவாகத்தாருக்கே அந்த ''ஆக்கபூர்வமான திட்டம்''

யத்தை முதன் முதல் எதிர்த்து பிரதமருக்கு பிரஸ்தாபித்தவர் தமன்கடுவ வண பிரதம சங்கநாயகதேரோ என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தேசிய அரசாங்கம் பதவிக்கு வருமுன் எதிர்க் கட்சியிலிருந்த ஐ. தே. க.யினர் சிலர் இது நியாயமான கோரிக்கை என்று டாக்டர் அவர்கட்கு கடிதங்கள் எழுதினர். ஆனால் அரசாங்கத்தைப் பொறுப்பேற்று பல வருடங்களாகியும் எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்காதிருக்க தேசிய அரசாங்கத்தின் மந்திரி சபையில் தலத்தாபன மந்திரியாக கடமை புரிந்த செனட்டர் மு. திருச்செல்வம் அவர்களே இப்



திரு. வீ. பூபாலபிள்ளை ஜே. பி.

புனித நகர விடத்தையிட்டு ஆராய ஒரு குழுவை நியமித்தார் என்பதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத விடயம்.

தமிழ் தலைவர்கட்கிடையில் ஒரு விடயத்தில் பல தரப்பட்ட கருத்திருந்தமையால் அவை தட்டிக்கழிக்கப் படுகின்றன என்று பொதுவாகக்கூறப்படுகிறது. ஆனால் கோணேசராலயப்புனிதநகர விடயம் ஏகோபித்த விடயமாயிருந்தும் தட்டிக்கழிப்பது எதனால்? எதிர்ப்பு எந்த இடத்தில்இருந்துகிளம்பியது? தமிழர்களில்லாத மற்றவர்களிடம் தானே? ஆகவே தமிழர்களுக்குள் பிளவு மனப்பான்மையிருந்தால் மட்டும் விடயங்கள் தட்டிக் கழிக்கப்படும் என்பதில்லை; ஒற்றுமையாகக் கேட்டாலும் பெரும்பான்மையர் விரும்பாத விடயம் தட்டிக் கழித்துக்கொண்டே வரப் படும் என்பது வெள்ளிடைமலை;

மேலும் ''நாங்கள் இத்திட்டத்தை ஆரம்பத்தில் கொண்டுவந்த பொழுது தமிழ்த் தலைவர்கள் இதற்குச் சாதகமாக எம்முடம் நடந்து கொள்ளவில்லை

## சித்திரவேலுவுக்கு வீ பூபாலபிள்ளை பதில்!

நிரந்தரக் காரியதரிசிகளைக் கொண்ட ஒரு குழுவை உண்டாக்கி அது திருகோணமலையின் அபிவிருத்தியில் முக்கிய கவனஞ் செலுத்தி தனது சிபார்சைச் செய்வதுடன் பிரட்டறிக் கோட்டையில் எந்தப் பகுதியை புனித நகரமாக்கலாம் என்பதையும் கவனத்திற்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுள்ளார்கள். முன்னதோ கோணேஸ்வர புனித நகர விடயத்திற்கு மட்டுமே ஆராய நியமனம் பெற்றது. ஆனால் பின்னையதோ திருகோணமலை அபிவிருத்தி, அதில் ஒருகட்டம் புனிதப்பகுதி விடயம்.

என்னவென்று தெரியாமலிருக்க வீரகேசரியின் நிருபர் அறிந்தது விந்தையானதே. அதிலும் முழுவிந்தையானது பரிபாலன சபை வகுத்துள்ள திட்டங்களில் உள்ள ஆதாரங்களில் ஒன்று ''கோணேஸ்வரத்தை புனித நகராக்கும் விடயத்தை முதன் முதல் எதிர்த்தவர் சேருவாவில தலைமைப்பிக்கு சுமங்கல ஸ்ரீ நாயகதேரோ. ஆனால் இவரும் இப்பொழுது இந்தப் புனித நகர் திட்டத்தை ஆதரிக்கிறார்'' என்பது இவர் எப்பொழுது எவ்விதம் அறிவித்தார் என்பது நிருவாக சபைக்கே தெரியாது அவ்விடயம் அறிவிக்கப்படவுமில்லை. புனித நகர விட

ஆனால் அரசியல் மேடைகளில் அவர்கள் இது சம்பந்தமாகக் கூப்பாடு போடுவதாக அறிகிறோம். அவர்களது ஒத்துழைப்பு எமக்குத்தேவையில்லை''. என்றும் தலைவர் கூறியதாக பத்திரிகையில் உள்ளது. முதன் முதலாக புனித நகர் விடயத்தை 11-11-59ல் காலஞ்சென்ற சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களே ஆரம்பித்துள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று தமிழ்த்தலைவர் ஒருவரால் குரல் எழுப்பப்பட்ட விடயத்தை பூர்த்தி அடையச் செய்யுமுகமாக ஒரு அர

(2-ம் பக்கம் பார்க்க)

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

**யூ. என். பியின் வடபகுதிப் பேச்சாளர்!**

யூ. என். பி. வருகிற முறை தமிழரசாரை ஆதரிக்கமாட்டாது.

—ஜீ. ஜீ.
(ஈழநாடு 1-5-70)

# சாவகச்சேரித் தொகுதியெங்கும் பொங்கி வழியும் தமிழுணர்ச்சி!

# சென்றமுறையைவிட எத்தனை ஆயிரம் அதிகப்படி வாக்குகளால் நவம் வெல்லுவார்?

## இதுவே எங்கும் பேச்சு! கடமை வீரன் வெற்றி உறுதி!

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரித் தொகுதி தமிழரசு வேட்பாளர் கடமை வீரன் நவரத்தினம் அவர்களின் வெற்றி தனிப்பட்ட ஒரு நவரத்தினத்தின் வெற்றியல்ல; சாவகச்சேரியில் வாழுகின்ற தமிழ் உணர்ச்சிகொண்ட அத்தனைபேரின் வெற்றி என்பதையும் நாமெல்லாம் அரசியலில் பங்காளிகள் என்கின்ற உணர்ச்சியும் எழுச்சியும் இளைஞர்கள் மத்தியிலே பெருக்கெடுத்து இருக்கின்ற காரணத்தினல் கடந்த தேர்தல் வெற்றியிலும் பார்க்க இம்முறை அதிகப்படியான மேலதிக வாக்குகளால் கடமை வீரன் வெற்றி பெறுவார் என்பதில் இம்மியும் ஐயமில்லை.

இலங்கையின் அரசியல் நிலைமையைப் பொறுத்தவரையில் சாவகச்சேரியில் அரசியல் சூடும் வேகமும் ஏனைய தொகுதிகளுக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்கக் கூடிய அளவுக்கு கடமை வீரனின் வெற்றி கல்லெழுத்தில் பொறிக்கப்பட்ட வெற்றியாகும்.



மூலை முடக்கெல்லாம் பட்டி தொட்டியெல்லாம் பைந்தமிழ் காக்கப் புறப்பட்ட சிங்கத் தமிழன் திரு. நவரத்தினத்தின் அமோக வெற்றிக்காக இரவு பகலாக இளைஞர் பட்டாளம் உழைத்துக் கொண்டிருக்கின்றது. தொகுதியின் பல பகுதிகளிலும் தேர்தல் குழுக்களை அமைப்பதில் வாலிப முன்னணியினர் புயல் வேகத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். எங்கு பார்த்தாலும் கடமை வீரனின் வெற்றி பற்றிய கதைதான். அந்த அளவிற்கு மக்கள் மத்தியிலே தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று அரசியலில் நாகரீகத்தையும் பண்பாட்டையும் வளர்த்து வரும் நவரத்தினம் தென்மராட்சி மக்களுக்கெல்லாம் ஓர் இரத்தினம்.

அந்த வெற்றிக்கு உரித்தான நவரத்தினத்தின் வெற்றி விழாவைக் காண்கின்ற மே 27ஐ இலட்சிய எண்ணங் கொண்ட தென்மராட்சியின் இளைஞர் சேனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

---

### இனவெறிச்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருபவர் இராசதுரை. அத்தனை சிறப்புவாய்ந்த நமது எழில் தமிழ் ஆளர் இராசதுரையை எதிர்த்து பிரான்சிஸ் சேவியர் திருமேனிப்பிள்ளை என்ற ஒரு பெருந்துரோகப் பிறவியை தி.மு.க. வேட்பாளர் என்ற பெயரில் தேர்தலுக்கு நிறுத்தியிருக்கிறார் இளஞ்செழியன்!

எழில் தமிழ் ஆளர் இராசதுரையை எதிர்த்துப்போட்டியிடும் இந்த சேவியர் யார்?

ஓரிரு மாதங்களுக்கு முன்பு சிங்கள இனவெறிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்புக் கிளை அலுவலகத்தில் பொறுப்பாளராக இருந்தவர்தான் இந்த சேவியர்! தி.மு.க. என்றால் அது என்ன சீரகமா மிளகாயா? என்று கேட்கும் அளவுக்கு கழகத்தின் சிறப்பான வரலாறு தெரியாதவர் இந்த சேவியர்,

திடீரென்று ஓரிரவுக்குள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து விலகி தி.மு,க. என்ற பெயரில் வேட்பாளராகப் போட்டியிடும் இவரை மக்கள் பலமாகச் சந்தேகிக்கிறார்கள்! நானும் பகிரங்கமாக ஒன்று கேட்க விரும்புகிறேன். இளஞ்செழியனுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏதேனும் அந்தரங்க உறவு உண்டா?

பருத்தித்துறையில் நமது மறத்தமிழ்வீரர் துரைரத்தினத்தை எதிர்த்தும் இளஞ்செழியன் தி.மு.க. என்ற பெயரில்விசாகரெட்னம் என்பவரை வேட்பாளராக நிறுத்தியிருக்கிறார். பள்ளிக்கூடத்தில் மாணவனாக இருந்த காலம் தொடக்கம் தி.மு.க. உணர்வுகளோடு ஊறி வளர்ந்தவர் பருத்தித்துறை துரைரத்தினம்! பைந்தமிழர் போராட்டங்களில் பலமுறை தடுப்புக் காவலில் இருந்தவர்! சிறைவாசம் அனுபவித்தவர்! பயங்கர இராணுவ வெறியர்களின் பாதச்செருப்புகளால் உதைபட்டவர் மிதிபட்டவர் துரைரெத்தினம்!

விசாகரெத்தினம் என்ன செய்தார்? வெறும் விளம்பரக்கூட்டமான இளஞ்செழியன் கட்சியில் சேர்ந்து தமிழக தி.மு.கவுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் தேர்தலில்குதித்திருப்பதைத் தவிர தமிழினத்துக்காக வேறு என்ன செய்தார்? பாவம் இளஞ்செழியனின் சூழ்ச்சிகளுக்கு இவர் பலியாகிவிட்டார் என்றே நான் கூறுவேன்!

ஈழத்துக்காந்தி செல்வாவின் பொற்கரத்தில் முத்தமிட்டு மரியாதை செய்தார் தி.மு, க. தலைவர்களில் ஒருவரான எம். ஜி. ஆர்.

மெய்சிலிர்க்க- கண்கலங்க பெரியவர் செல்வாவைத் தழுவி மகிழ்ந்தார் தமிழக தி.மு.க.சட்டமன்ற அவைத் தலைவர் புலவர் கோவிந்தன்!

ஈழத்தமிழ்த்தலைவர் செல்வாவின்முன் காலைக்கதிரவன் முன் கமலமலர்போல் மகிழ்ந்து உருகிநின்றார் இந்திய மானிலங்கள் அவை உறுப்பினரான தி.மு.க. இலட்சிய வீரர் எஸ். எஸ். ஆர்.!

கேவலம் இங்குள்ள இளஞ்செழியன் 'கிளிக்' தந்தை செல்வாவை 'கிழட்டுத்தலைவர்' என்று கிண்டல் செய்வது எவ்வளவு பெரிய பாதகமாகும்!'

ஈழத்தமிழர்கள், இலங்கையில் தி.மு.க. ஒரு கலாச்சார இயக்கம்மட்டுமே என்பதையும், தமிழரசுக்கட்சிதான் ஈழத்தமிழர்களின் ஒரே அரசியல் விடுதலை இயக்கம் என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு மணவைத்தம்பி தமது அறிக்கையில் கூறியுள்ளார்!

---

### தமிழரசார்.. ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் ஜனாப் உதுமான் லெப்பை தொடர்ந்து கூறியதாவது:-

இன்று இலங்கையில் உள்ள எந்த சிங்களக் கட்சிகளாவது சிறுபான்மை இனத்தவர்களாகிய தமிழ், முஸ்லீம் மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் வழங்க மாட்டாது என்பது நாம் அறிந்த உண்மை—ஆகவே நம்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்மானால் நம் உரிமைகள் காக்கப்பட வேண்டுமானல், சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றம் சென்றால்தான் முடியும். ஆகவே நீங்கள் பட்டிருப்பு தொகுதியில் போட்டியிடும் அகில இலங்கை தமிழ் அரசுக்கட்சிதலைவரும்தமிழரசுக்கட்சி வேட்பாளருமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள்—அது மட்டுமல்ல இம்முறை வடக்கு கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் 19 தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்கள் ஒன்றாக நாடாளுமன்றம் செல்வது உறுதி, அப்போதாவது தமிழ் மக்களின் தமிழ் உணர்ச்சியும் மொழிப் பற்றும் இந்த பச்சோந்திகட்குப் புரியட்டும்'

---

### என்ன சொல்கிறார் இந்த மனிதர்?

ஒரு நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள் குறிப்பிட்ட தமது கோரிக்கையை கைவிட்டுவிட்டால், அக்கோரிக்கை மீண்டும் உயிர் பெறமுடியாது.

—கரணவாய்க் கூட்டத்தில்
மூ. சிவசிதம்பரம்.
(டைம்ஸ் ஆப்சிலோன் 1-5-70)


சமஷ்டிக் கோரிக்கை பகற்கனவு; அது ஒருபோதும் கிடைக்காது; சமஷ்டிக்கோரிக்கையை தமிழரசுக்கட்சி கைவிடவேண்டும்.

—(மற்றோர் கூட்டத்தில்
திரு. மூ. சிவசிதம்பரம்.)

---

# கேட்கிறேன் ஒரு கேள்வி

வாய்ப் பேச்சில் மட்டுந்தான் தமிழரசுக் கட்சிக்காரர்கள் வல்லவர்களே தவிர வரலாற்றில் அவர்கள் எதைச் சாதித்தார்கள் என்று கேட்கிறார்கள்...... வஞ்சனையே வாழ்வாகக் கொண்ட வரலாற்றுத் துரோகிகள் சிலர்!



தமிழரசுக் கட்சியின் வல்லமையைப் பற்றிஏன் தமிழரசுக் கட்சிக் காரனிடமே கேட்கிறீர்கள்! நீங்கள் தாள் தாங்கிப் பிழைக்கும் ஆள்வோரின் கூட்டத்தைப் பார்த்துக் கேளுங்கள்-அவர்களே கூறுவார்கள்... எங்கள் ஆற்றல் பற்றி! அழிக்க முடியாத எங்கள் வல்லமை பற்றி!

விடுதலை பெற்ற இலங்கையில் இதுவரை வெறிபிடித்த சிங்கள ஆட்சியாளரால் தடை செய்யப்பட்ட கட்சி தமிழரசுக் கட்சியை தவிர வேறு எந்தக் கட்சி?

உலக வல்லரசுகளில் ஒன்றான ரஷ்யாவின் ஆசியோடு இந்நாட்டில் உலவும் ரஷ்ய கம்யூனிஸ்ட்கட்சிக்கு தடை விதிக்கப்பட்டதா?

பாராளுமன்ற ஜனநாயகத்தில் எனக்கு அணுவளவும் நம்பிக்கையில்லை என்று பகிரங்கமாகச் சொலலும் பலம் பொருந்திய சீனாவின் பாதையிலே போகும் இந்நாட்டுச் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு இதுவரை தடை விதிக்கப்பட்டதா?

பச்சை வகுப்புவாதத்தைத் தூண்டிவிட்டு அமெரிக்கர்களின் உதவியோடு நாட்டின் சோசலிச சக்திகளை ஒடுக்க முதலாளிகளின் பணங்கொண்டு பலதடவை முயன்ற யூ. என். பி. கட்சிக்கு ஒரு தடவையாவது தடைவிதிக்கப்பட்டதா?

இத்தனை பலம் பொருந்திய கட்சிகளுக்கே தடை விதிக்காது மாறி மாறி இயங்கிய இந்நாட்டு அரசபீடம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மட்டும் ஒரு தடவைக்கு இருதடவைகள் தடைவிதித்ததேன்?

உங்கள் மொழியில் சொல்வதானல் வாய் வீச்சுக்காரர்களுக்குப் பயந்து எதற்காக உத்தரவுகள் போட்டு தடை விதித்து அரசபீடம் ஓடிக் கலங்கவேண்டும்?

அவர்களுக்குத் தெரியும்...... ஆற்றலுள்ள ஈழத் தமிழர் இயக்கம் தமிழரசுக் கட்சிதான் என்பது அவர்களுக்குத் தெரியும்!

துரோகப் பிறவிகளான உங்களுக்கு வேண்டுமானல் தமிழரசுக் கட்சி தூசாகத் தோன்றலாம். ஆனல் பகைவர்களான அவர்களுக்கு தமிழரசுக் கட்சி அவர்களைப் பொறுத்தவரை படுபயங்கரப் பூதம் என்பது நன்றாகத் தெரியும்!

ஈழத் தமிழர்களின் எரிமலை நெஞ்சங்களின் மொத்த வடிவம் இலங்கைத் தமிழரசுக் கட்சி!

அழுந்தி அழுந்தித் துடிக்கும் இலங்கைத் தமிழனின் அல்லல்பட்டு ஆற்றாதழுத கண்ணீர் வெள்ளத்தின் நீர்த் தேக்கம் தமிழரசுக் கட்சி!

ஆம் தமிழரசுக் கட்சியின் ஆற்றல் சாதாரணமானது என்று நினைத்துக் கொண்டீர்கள்? எடுத்ததற்கெல்லாம் கிண்டல் பேசுவதொன்றே செய்யும் ஈனப் பிறவிகளே! நீங்கள் தமிழரசுக் கட்சியை நிந்தை செய்யலாம். ஆனல் வரலாறு ஒருபோதும் தமிழரசை மறவாது!

எழில் தமிழ் ஆளர்,
செ. இராசதுரை.

---

### வேட்பாளரும் வாக்காளனும்

நீர்வேலியில் (கோப்பாய்)

வேட்பாளர்: (வாக்காளரின் நாடியைத் தடவியபடி) தம்பி, ராசா மூன்று முறை தோத்துப் போனேன். இந்த முறை என்னைத் தூக்கி விட வேணும்.

வாக்காளன்: அதுக்கென்ன—எலக்சனன்று ஒரு தேடா வளையம் வாங்கிவாருங்கள். சுருக்குப் போட்டு உந்த ஆல மரத்திலே தூக்கி விடுகிறேன்.

---

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது

ஆசிரியர்: கோவை மகேசன்.